முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.

Original Suit No. 349/2020

2023ம் ஆண்டு **ஜூன்** திங்கள் 14ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.ரூபி அனிதா, பென்ச் கிளர்க் கிரேடு-2 என்பவரால் உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பெயர்- | குமாரசாமி | தொழில் - விவசாயம் |
| த.பெ | துரைசாமி | வட்டம் - மண்மங்கலம் |
| கிராமம் - | காளிபாளையம் | மதம் - இந்து |
| ஜாதி - | | வயது -50 |

பிரதிவாதிகள் தரப்பில் **குறுக்கு விசாரணை**

1ம்பிரதிவாதியின் கணவர் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்துபோன பாலாமணியை எனக்கு 3 வருடங்களாக தெரியும். அவர் நன்னியூர் புதூர் பகுதி அவரது பூர்விகம். அவர் என் உறவினர் அல்ல. என் ஊருக்கும் அவர் ஊருக்கும் இடையே சுமார் 5 கிமீ தொலைவு இருக்கும். மேற்படி நபர் நண்ணியூர் பகுதியில் இருந்து வாங்கல்பாளையத்திற்கு குடி வந்தார். அவர் வாத்துகடை வைத்துள்ளார். அந்தவகையில் அவர் எனக்கு பழக்கம். அதனால் பணம் கொடுத்தேன். அந்த வாத்துக்கடையின் மொத்த முதலீடு 75000 முதல் 1 லட்சம் இருக்கும். அவர் கடைக்கு நான் கறி வாங்க செல்வேன் அந்தவகையில் பழக்கம் ஏற்பட்டது. மேற்படி விபரங்களை என் வழககுரையில் சொல்லவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் விவரங்களை தெரிந்து கொண்டேன். பாலாமணிக்கு வேறு எதுவும் தொழில் இல்லை. அவரை வாங்கல்பாளையத்தில் கறி வாங்க போனதில் இருந்து தான் அறிமுகம். அதற்கு முன்பு பாலாமணி என்ன வேலை செய்தார் என்ன வருமானம் என்று எனக்குதெரியாது. அவரை

பழக்கமாகி ஒரு மாதத்தின் பிறகு குடுமப உறுப்பினர்களை பற்றி தெரிந்துகொண்டேன். அவரது மனைவி 1ம் பிரதிவாதி டீச்சர் என்பது தெரியும். இந்த வழக்கு தாக்கலுக்கு முன்பு 1ம் பிரதிவாதியின் பையனுக்கு 15 வயது இருக்கும். அவர் 2ம் பிரதிவாதி. பெண்ணிற்கு 13 வயது இருக்கும். அவர் 3ம் பிரதிவாதி. வழக்கிற்குமுன்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. வழக்கறிஞர் அறிவிப்பு (A2) அனுப்பும் போது எனது வழக்கறிஞரிடம் பாலாமணியின் மனைவி மற்றும் விவரங்கள் பற்றியும் அவரது குழந்தைகள் மைனர்கள் என்பது பற்றியும் சொன்னேன். வழக்குரையில் பாலாமணியின் பிள்ளைகளை பொறுத்து வயது திருத்தம் செய்யப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. நான் B.Com படித்துள்ளேன். வழக்கில் சொல்லியுள்ள முகவரி என்னுடையது தான். கதவு எண் மட்டும் மாறியுள்ளது. துவரபாளையத்தை சேந்த சுப்புராயன் மகன் கணேசன் கரூர் டவுன் வேலுசாமிபுரம் திருவள்ளுவர் நகர் 4 வது கிராஸ் என்ற முகவரயில் வசிக்கும் செல்லப்பகவுணடர் மகன் ரமேஷ், சுக்காலியூர் அஞ்சல் பண்டுதகாரன்புதுரில் வசிக்கும் பெரியசாமி மகன் கார்மேகம், துவரபாளையத்தை சேர்ந்த கணேசன் மனைவி பரிமளா மற்றும் திருவள்ளுவர் நகர் 4 வது கிராஸில் வசிக்கும் ரமேஷ் மனைவி வினோதா ஆகியோரும் நானும் சேர்ந்து கரூர் டவுன் செங்குந்தபுரம் 5து கிராஸ் என்ற முகவரியில் விகாஷ் பைனான்ஸ் நடத்தி வருகிறோம் என்றால்சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்கள் நிறுவனத்தில் பதிவு நகல் அது B1. இந்த வழககிலோ அல்லது பிரமாண வாக்குமூலததிலோ நான் இதுபோன்ற பைனான்ஸ் நடத்துவதாக சொல்லவில்லை. பாலாமணி பைனான்ஸ் முதலில் 2016, 2017 காலகட்டத்தில் வரவு செலவு வைத்திருந்தார் பிறகு இல்லை. எங்கள் நிறுவனத்தில் பங்கு தாரர்

ஆவணம் என்னிடம் உள்ளது அந்த நிறுவனத்தை நான் தான் நிர்வாகம் செய்கிறேன். எங்கள பங்கதாரரில் ஒருவரான கணேசன் என்பவர வேம்பு இன்டஸ்டிரிஸ் என்ற நிறுவனத்தை காமராஜர் நகரில் நடத்தி வருகிறாரா என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. வழக்கு கடன் ரூ 6 லட்சம் எனக்க வந்தது என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் இருக்கிறாதா என்றால் நான் விவசாயம செய்கிறேன் ஆடு மாடு உள்ளது. நாங்கள் நடத்தி வரும் பைனான்ஸ் மூலம் வருமானம் இருக்கிறது. மேற்படி வருமானத்திற்கான ஆவணங்களை அளிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. எனக்கு விவசாய நிலம் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விவசாய நிலம் இல்லை ஆடு மாடுகள் இல்லை. அதனால் தான் விவசாயம் மூலம் வருமானம் வருகிறது என்பதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால்சரியல்ல. எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் பேங்க் மண்மங்கலம் கிளையில் வங்கி கணக்கு உள்ளது. எனது தேவை போக மீதம் உள்ள பணத்தை வங்கியில் செலுத்திவிடுவேன். கடந்த 3 வருடங்களாக மேற்படி கணக்க உள்ளது. வங்கி கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க ஆட்சேபணை இருக்கிறதா என்றால் இல்லை. வாதி தரப்பு சாட்சி 2 மற்றும் 3 ஆகியோரை 2018 இருந்தே தெரியும். அவர்கள் என் நண்பர்கள். மேற்படி இருவருக்கும் எனக்கும் இடையே வரவு செலவு இல்லை. இந்த பாலாமணி கடன் தொகையை என்னிடம் 2018 டிசம்பரில் கேட்டார். அப்போது பணமில்லை என்பதால் 6 அல்லது 7 மாதம் ஆகும் என்று சொன்னேன். பாலாமணிக்கு மேற்படி தொகை எதற்காக தேவைப்படுகிறது என நான் தெரிந்துகொள்ளவில்லை. பாலாமணி இறந்த பிறகு தான் அவரது மனைவியை எனக்கு தெரியும். எனது தாய் தகப்பனார் ஆடு மாடு

வளர்கிறார்கள் அவர்களுக்கு வங்கி கணக்கு உள்ளது அதில் அவர்கள் பணம் வைத்துள்ளார்கள், நான் கொஞ்சம் பணம் வைத்திருந்தேன். மீதியை அவர்களிடம் வாங்கி 6 லட்சம் கொடுத்தேன். எனது தகப்பனார் நான் கணக்கு வைத்துள்ள வங்கி கிளையில் கணக்கு வைத்துள்ளார். வெங்கமேட்டில் உள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் அவருக்கு விவசாய கணக்கு இருக்கிறது. என் தாயருக்கும் நான் கணக்கு வைத்துள்ள வங்கியில் கணக்கு உள்ளது எனது தாயார் 100 நாள் வேலைக்கும் செல்வார். அவர்களை சாட்சியாக விசாரித்தால் வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்த விவரம் தெரியுமா என்றால் சரிதான். ஆனால் என் தாயாரால் நடக்க முடியாது. அவர்களது வங்கி கணக்கு விவரங்கள் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஆட்சேபணை இல்லை.

1ம் பிரதிவாதி தனது கணவர் என்னிடம் பணம் வாங்கவில்லை என்று இந்த வழக்கில் ஒரு நிலை எடுத்திருப்பது எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதி தனது கணவர் பாலாமணி ஏற்கனவே கரூரில் உள்ள அரசி பைனான்ஸ் கார்பரேசன் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தார் என்பதும் அது மூடப்பட்ட பிறகு அவர் கரூர் டவுன் காமராஜபுரத்தில் உள்ள ஜி.ஜி எக்ஸ்போர்ட்ஸ் என்ற நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார் என்பதையும் அவர் பதிலில் இருந்து நான் தெரிந்துகொண்டேன். என் வீடு மண்மங்கலம் கிராமத்தில் உள்ளது. பாலாமணி பைனான்ஸ் மற்றும் எக்ஸ்போர்ட்ஸ் வேலை செய்த விவரம் பற்றி விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. வேம்பு பைனான்ஸ்ல் நான் பங்கு தாரர் இல்லை. வேம்பு இன்வஸ்மென்ட் பற்றி எனக்கு தெரியாது. வாங்கல்பாளையத்தில் உள்ள செந்தில் பைனான்ஸ் என்ற நிறுவனத்தின் உரிமையாளர் ராமசாமி என்பவரின்

வீட்டில் தான் பாலாமணி அவரது குடும்பத்துடன் இருந்துவருகிறார் என்பதை பற்றி தெரிந்து கொள்ளவில்லை. அதேபோல எங்கள் நிறுவனத்தின் பங்குதாரர் கணேசனும் மேற்படி ராமசாமி என்பவரின் வீட்டில் வாடகைக்கு இருந்தார் என்பது எதிர்வழக்குரை மூலம் தெரிந்துகொண்டேன் அதுபற்றி கணேசனிடம் விசாரிக்கவில்லை. எங்கள் நிறுவன பங்குதாரர் எங்கள் பைனான்ஸ் பங்குதாரர் கணேசன் முலம் பாலாமணி அறிமுகமானார் என்பது பற்றி எனக்கு தெரியாது. பாலாமணி எங்கள் பைனான்ஸ்ல் மேற்படி கணேசம்(B1) மூலமாக அறிமுகமானார். அதன் அடிப்படையில் தான் மேற்படி பாலாமணி மேற்படி நிறுவனங்களில் வேம்பு பைனான்ஸ்ல் கடன் வாங்கியிருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. அந்த நிறுவனத்தில் பா லாமணி வரவு செலவு செய்த போது அந்த நிறுவனத்தின் பணி செய்து ராஜசேகரன் என்பவர் மூலமாக 5 நிரப்பபடாத கடனுறுதிச்சீட்டுகள் மற்றும் மேற்படி நிறுவனத்தின் பெயர் அச்சடிகக்ப்பட்ட வாசகம் நிரப்படாத 5 கடனுறுதிச்சீட்டுகளில் பாலாமணி கையொப்பங்கள் பெறப்பட்டது என்றால் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது பாலாமணி மேநற்படி நிறுவனங்களின் பெற்ற நவம்பர் மாத 2019 தேதிக்குள் செலுத்திவவிட்டார் என்றும் அப்போது மேற்படி ராஜசேகரனிடம் கொடுத்த நிரப்பபடாத கடனுறுதி சீட்டு கேட்டபோது கைதவறுதலாக மற்ற ஆவணங்களுடன் வைத்துவிட்டதாகவும் திரும்பி கண்டுதருவதாக சொன்னதால் திரும்பி வந்துவிட்டார் என்றால அதுபற்றி எனக்கு தெரியாது. 1 வாரம் கழித்து மேற்படி ஆவணங்களை பாலாமணிக்கு திருப்பி கொடுத்து விட்டார் என்றும் அப்போது 50000 ரூபாய் நிலுவையில் இருப்பதாக கேட்டதால் அவர்கள் இருவருக்கும் இடையே மன வருத்தம் ஏற்பட்டது என்றுசொன்னால் அதுபற்றி

எனக்கு தெரியாது. பாலாமணி 10.12.2019 ல் இறந்துவிட்டார். பாலாமணி இறந்தபின்பு பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிப்பதற்காக மேற்படி ராஜசேகரன் என்முலமாக வழக்கு புரோநோட்டு தயார் செய்து அதில் பாலுசாமி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டதாகவும் சரவணன் என்பவர் எழுதியதும் சாட்சியமுமாக இருந்தார் என்றும், இந்த வழக்கு புரோநோட்டை மோசடியாக தயார் செய்து வழக்கு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ள படி 22.01.2010 தேதியிட்ட இறந்துபோன பாலாமணியின் பெயரில் உள்ள கிரைய பத்திரம் என்வசம் பாலாமணியால் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பாலாமணியின் அறிமுகம் நான் அவரின் கடைக்கு சென்றதால் ஏற்பட்டது தவிற வேறு வகையில் இல்லை. இந்த வழக்கின் பிரதிவாதிகள் மீது பல்வேறு தரப்பினரர்களால் தாக்கல செய்துள்ள அசல் வழக்கு எண்கள் 479/2020, 280/2020, 480/2020, 372/2020 ஆகிய வழக்கு விவரங்களை பற்றி எனக்கு தெரியாது. என் வழக்கை பற்றி மட்டும் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் 02.01.2010 தேதியிட்ட கிரைய பத்திரம் பாலாமணி உடையது அது நீதிமன்றத்திற்கு எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது.

**வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்துசெய்தார்.
(ஒம்/– R.கனகராஜ்),
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.